# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.சா.எண். 205/2015

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்கள் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எ.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அருள் | | |
| த/பெ. | கணேசன் | வட்டம் | கும்மிடிப்பூண்டி |
| கிராமம் | எளாவூர் | வயது | 52 |
| தொழில் | தமிழ்நாடு காவல் துறை | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 7 ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தயும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய தான். என் தரப்பு ஆவணங்களாக எ.ம.சா.ஆ 1 முதல் 8 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ 1 | 12.05.2008 தேதியிட்ட வாதி சண்முகம் மற்றும் அவரது சகோரர்களுக்கிடையே எழுதி பதிவு செய்த பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ 2 | 25.04.2013 தேதியிட்ட வாதியின் சகோதரர் கோதண்பாணி அவருக்குண்டான பாக சொத்தை 8ம் பிரதிவாதி சங்கருக்கு விற்பனை செய்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ 3 | 04.09.2014 வாதியின் சகோதரர் கோதண்டபாணி அவருக்குண்டான பாக சொத்தை 8ம் பிரதிவாதி சங்கருக்கு விற்பனை செய்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ 4 | 29.04.2004 தேதியிட்ட பட்டா எண் 639 கணேசன் பெயரில் வழங்கப்பட்ட பட்டா அசல் |
| எ.ம.சா.ஆ 5 | பட்டா எண் 3088 கணேசன் வாரிசுகள் பெயரில் வழங்கப்பட்ட கூட்டு பட்டா கணினி ஆவணம் |
| எ.ம.சா.ஆ 6 | 12.07.2024 பசலி 1434 க்கு செலுத்திய கிஸ்தி ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ 7 | 18.06.2015 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு நகல் |
| எ.ம.சா.ஆ 8 | 18.06.2015 பிரதிவாதி வழக்கறிஞர் அனுப்பிய ஏ.டி. கார்டு அசல் |

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.